இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

மூன்றாம் முறையாக ஆண்டவர், ‘சாமுவேல்’ என்று அழைத்தார். அவன் எழுந்து ஏலியிடம் சென்று, “இதோ! அடியேன். என்னை அழைத்தீர்களா?” என்று கேட்டான். அப்பொழுது சிறுவனை ஆண்டவர்தாம் அழைத்தார் என்று ஏலி தெரிந்து கொண்டார். பின்பு ஏலி சாமுவேலை நோக்கி, “சென்று படுத்துக்கொள். உன்னை அவர் மீண்டும் அழைத்தால் அதற்கு நீ, ‘ஆண்டவரே பேசும், உம் அடியான் கேட்கிறேன்’ என்று பதில் சொல்” என்றார். சாமுவேலும் தன் இடத்திற்குச் சென்று படுத்துக்கொண்டான். அப்போது ஆண்டவர் வந்து நின்று, ‘சாமுவேல், சாமுவேல்’ என்று முன்புபோல் அழைத்தார். அதற்குச் சாமுவேல், ‘பேசும், உம் அடியான் கேட்கிறேன்’ என்று மறுமொழி கூறினான். *(1 சாமு 3:8-10)*

# ஒவ்வொருவரும் அமைதியை உருவாக்குபவர்களாகச் செயல்படுங்கள்!

## திருத்தந்தை வேண்டுகோள்

போரில் ஈடுபட்டுவரும் நாடுகளை நினைவில்கொண்டு, இவ்வாண்டின் ஒவ்வொரு நாளும் விசுவாசிகள் ஒவ்வொருவரும் அமைதியை உருவாக்கு பவர்களாகச் செயல்பட வேண்டும் என்ற அழைப்பை விடுத் துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

57வது உலக அமைதி தினமான ஜனவரி முதல் தேதி நண்பகல் மூவேளை செப உரை வழங்கியபின் இவ்வழைப்பை விடுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், போரில் ஈடுபட்டுவரும் உக்ரைன், பாலஸ்தீனம் மற்றும் இஸ்ராயேலை மறந்து விடாமல் அமைதி திரும்ப இறைவேண்டல் செய் வோம் என கேட்டுக் கொண்டார்.

திருஅவையில் சிறப்பிக்கப்படும் 57-வது உலக அமைதி தினத்தின்போது உரோம் நகரின் Sant'Egidio அமைப்பால் ஏற்பாடுச் செய்யப்பட்ட நிகழ்ச்சிக்கும், இத்தாலியின் Goriziaவில் ஏற்பாடுச் செய்யப்பட்ட அமைதி ஊர்வலத்திற்கும் தன் நன்றியையும் வெளியிட்டார் திருத் தந்தை பிரான்சிஸ்.
போரால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் ஏவுகணை தாக்குதல்கள் தொடர்ந்து வருவதும், பலியாகும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதும் மிகவும் கவலை தருவதாக உள்ளன என உரைத்த திருத் தந்தை, உலகில் அமைதி நிலவ அனைவரின் செபத்திற்கும் அழைப்பு விடுத்தார்.

உலகில் பல்வேறு பகுதிகளில் போராலும்



*உலக அமைதிக்காக மெழுகுதிரி ஏந்திய ஹங்கேரி மக்கள்*

பயங்கரவாதத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் அமைதி நிலவ வேண்டும் என்ற நோக்கத்தில், "அனைத்து நாடுகளிலும் அமைதி" என்ற தலைப்பில் உரோம் நகரிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் அமைதி தொடர்பான நிகழ்ச்சிகளை ஏற்பாடுச் செய்துள் ளது கத்தோலிக்க Sant'Egidio பிறரன்பு அமைப்பு.
உலகில் அமைதிக்காக உழைத்து வரும் MEAN எனப்படும், வன்முறையற்ற நடவடிக்கைக்கான ஐரோப்பிய இயக்கம், உக்ரைன் நாட்டில் அமைதிப் பணிகளையும் மனிதாபிமானப் பணிகளையும் ஆற்றி வருவது குறித்தும் தன் நன்றிகளை புத்தாண்டு தின நண்பகல் மூவேளை செப உரையின் இறுதியில் வெளியிட்டார் திருத் தந்தை பிரான்சிஸ்.

மேலும், விசுவாசப் பயணத்தில் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால், ஏனைய கிறிஸ்தவ சபைகளுடனும், கிறிஸ்தவ சமூகங்களுடனும் கிறிஸ்தவ ஒன்றிப்பு உரையாடல்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் திருத்தந்தை தமது சனவரி மாத இறைவேண்டல் கருத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.


கிறிஸ்தவ சமூகங்களுக்குள் காணப்படும் பல்வேறு வகையான தனிவரங்கள் என்னும் கொடையை அங்கீகரிக்கவும், கத்தோலிக்க திருஅவையில் காணப்படும் பல்வேறு வகையான வழிபாட்டு பாரம்பரியங்களின் வளமையை கண்டுகொள்ளவும் தூய ஆவியார் நமக்கு உதவுவாராக என செபிப்போம் எனவும் தமது சனவரி மாத இறைவேண்டலின் கருத்தில் இறுதியில் அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்

***கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்***

# சித்தியாவான், புனித சலேசியார் பங்கில் மறைக்கல்வி மாணவர்களின் முத்தமிழ் படைப்பு

சித்தியாவான்: கடந்த வருட திரு வருகைக்கால தயாரிப்புப் பணியில், சித்தியாவானை சேர்ந்த புனித சலேசியார் பங்கு மறைக் கல்வி மாணவர்கள் அபிநய நாடகம் ஒன்றினை அரங்கேற் றினர்.

பங்கு அளவில் நடத்தப்பட்ட "கிறிஸ்மஸ் பஜனை இரவு" நிகழ்ச்சியில் மறைக்கல்வி குழுவினைப் பிரதிநிதித்து மறைக்கல்வி மாணவர்கள், ஆசிரியர்களின் உதவியுடன் இந்நாடகத்தில் நடித்தனர். ஒருபகுதியில் மாணவர்கள் கிறிஸ்மஸ் பாடல்கள் பாட மறுபகுதியில் மாணவர்கள், இறைமகனின் பிறப்பு காட்சியை சிறப்பாகவும் சிரத்தை யுடனும் நாடகமாகப் படைத்தனர்.



பங்குதந்தை அருள்பணி பிரான்சிஸ் என்ரூ அவர்கள் அறிமுகபடுத்திய "பாடலின் வழிமறைக் கல்வி" எனும் திட்டத்தை அமல்படுத்தியதன் வழி மாணவர்கள் தயக்கம் இன்றி தைரியமாக மறைக்கல்வி பாடதிட்டம் அல்லாத நடவடிக்கைகளிலும் மிளிர்வதை தெள்ளத் தெளிவாக காண முடிந்தது.

இதன்வழி மறைக்கல்வி மாணவர்களிடையே இறைநம்பிக்கையும் ஆக்கத்திறனும் மேம்பட்டுள்ளதை காண முடிகிறது. மாணவர்கள் வகுப்பில் கற்றதை தன்மயமாக்க இதுபோன்ற நாடக நடவடிக்கைகள் மிகவும் உதவியாக இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. மாணவர்கள் மறைக்கல்வி வகுப்பில் கற்றதை பிறருக்கு இவ்வாறு எடுத்துக்கூறும் போதுதான் கற்றல் முழுமை பெறுகிறது என்பது கற்றல் மனநூல் கூறும் உண்மை. மேலும், நாடகப் படைப்பானது, கற்றதை மாணவர்கள் உணரச் செய்யும் செயல்கள் ஆகும். மாணவர்களின் இந்த அற்புத



*கிறிஸ்மஸ் பாடலுக்கு நடனம் ஆடும் மாணவர்கள்*

படைப்பு அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தது.

பங்கு மறைக்கல்வி மாணவர்களின் இந்த நாடக அரங்கேற்றத்திற்கு நல்லாலோசனைகள் தந்துதவிய பங்குத்தந்தைக்கும் உதவிகரம் நீட்டிய பெற்றோர்களுக்கும் பங்கு மக்களுக்கும் அன்று ஏற்பாட்டுக் குழுவினர் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

*புனிதமரியா அந்தோனி*

# சுங்கை பட்டாணியில், புனித கன்னி மரியாவின் அமலோற்பவம் விழா கொண்டாடப்பட்டது

சுங்கை பட்டாணி: ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 8-ம் திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்படும் அருள்மிகப் பெற்ற திருவிழா அமலோற்பவ அன்னையின் திருவிழாவாகும். கெடா மாநிலத்தில் சுங்கை பத்து தோட்டத்தில் அமைந்துள்ள, புனிதமிகு சிற்றாலயத்தில் அமலோற்பவ அன்னையின் திருவிழா மிகச் சிறப்பாகக் கடந்த மாதம் கொண்டாடப்பட்டது. இச்சிற்றாலயம் சுங்கைப் பட்டாணி கிறிஸ்து அரசர் பங்கின் கீழ் செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் பல பகுதிகளில் இருந்து நாள்தோறும் இச்சிற்றாலயத்தை நோக்கி வரும் விசுவாசிகளின் அநேக விண்ணப்பங்களும் தேவைகளும் அன்னை



யின் இரக்கத்தினாலும் பரிந்துரையினாலும் அற்புதமாய் நிறைவேறி வருவதால், மக்கள் திரளாக இங்கு ஒன்று கூடுவது வழக்க மாகிவிட்டது.

சமீபத்தில், அமலோற்பவ அன்னையின் திருவிழா கொடியேற்றம் கடந்த 30/11/2023-ல் கிறிஸ்து அரசர் தேவாலய பங்குத்தந்தை அருட்பணி விக்டர் லூயிஸ் அவர்களால் திருப்பலியுடன் தொடங்கியது. ஒன்பது நாட்களுக்கு, நவநாள் வெவ்வேறு கருப்போருள்களோடு நிறைவேற்றப்பட்டது.

திருவிழா திருப்பலி கொண்டாட்டம் கடந்த 10/12/2023-ல் மாலை மணி 5.30க்கு மூன்று மொழிகளிலும் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஏறக்குறைய 2500 விசுவாசிகள் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கோலாலம்பூர், கிள்ளான், ஈப்போ, தைப்பிங், பினாங்கு என பல ஊர்களில் இருந்தும் திரளான மக்கள் பங்கு கொண்டு அன்னையின் அருளாசீரைப் பெற்று மகிழ்ச்சியாக சென்றனர்.

சிற்றாலயமாக இருந்தாலும், ஒவ்வொரு நாளும் சுங்கைப் பட்டாணி வட்டார மக்கள் (அதிச) தங்கள் நவநாள் இறைவேண்டல் களை முன்வைத்து ஆர்வத்துடன் நிறைவேற்றினர். மேலும், சுங்கை பத்து (அதிச) மக்களோடு பிற வட்டார மக்களும் இணைந்து இத்திருவிழா சிறப்படைய தோள்



கொடுத்தனர். இத்தருணத்தில் திருப் பலிகளை நிறைவேற்றிய பங்கு தந்தை அவர்களுக்கும், பேரருட்தந்தை (Msgr) ஹென்றி ராஜூ மற்றும் அருட்தந்தை அருள்நாதன் ஜோசப் அவர்களுக்கும் பங்கு சார்பாகவும் வட்டார சார்பாகவும் ஏற்பாட்டுக் குழுவினர் நன்றி நவில்ந்தனர்.

*-சவரிநாதன், சுங்கை பட்டாணி*




# இறைவார்த்தை-என்றுமே இனிதான பொங்கல்!

ஆண்டு தோறும் திருப்பலியோடு பொங்கல் கொண்டாடி இறைவனுக்கு நன்றி கூறும் திருநிகழ்வாக கத்தோலிக்கத் திருஅவையில் பொங்கல் ஒரு சிறப்பிடம் பெற்றுள்ளது. பொங்கல் என்பதற்கு `பொங்கி வழிதல்', அல்லது `பொங்குதல்' என்பது பொருள். அதாவது புதிய பானையில், புத்தரிசி யிட்டு, அரிசியில் இருந்து பால் பொங்கி வருவதால், நம் வாழ்வும், வளமும் அந்தப் பால் போன்று பொங்கி சிறக்கும் என்பது நம்பிக்கை.

பொங்கல் தினத்தன்று வழக்கமாக உழவர்கள் வயல்களில் விளைந்து, அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்களில் சிறிதளவைக் கொண்டு வந்து வீட்டில் பொங்கலாகச் சமைத்து, அதை கடவுளுக்கு நன்றி காணிக் கையாகப் படைப்பர். விவிலியத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் வரும் ஒரு சொல் அறுவடை. தொடக்கநூல் 8:22 இல் இறைவன் இவ்வாறு கூறுகின்றார், "மண்ணுலகு இருக்கும் நாளளவும் விதைக்கும் காலமும் அறுவடைக் காலமும் குளிரும் வெப்ப மும், கோடைக்காலமும் குளிர்க்காலமும் பகலும் இரவும் என்றும் ஓய்வதில்லை" அறுவடை தொடர்ந்து நடப்பதால், அதற்கு விழா எடுக்க ஆண்டவர் கூறியுள்ளார்.


விடுதலைப் பயண நூல் 23:16இல், "வயலில் நீ விதைத்து, உன் உழைப்பின் முதற்பலன் கிட்டும்போது, "அறுவடை விழா"வும், ஆண்டுத் தொடக்கத்தில் வயலிலிருந்து உனது உழைப்பின் பயனை ஒன்று சேர்க்கையில், "சேகரிப்பு விழா"வும் எடுக்க வேண்டும்" ஆண்டு தொடக்கத்தையும், அறுவடையையும் விழாவாகக் கொண்டாட ஆண்டவரே பழைய ஏற்பாட்டிலேயே கூறியுள்ளார்.

புதிய ஏற்பாட்டில், இயேசு உணவிற்காக நன்றி கூறுகின்றார். யோவான். 6:11 இல், இயேசு அப்பங்களை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி, அமர்ந் திருந்தோருக்குக் கொடுத்தார். என்று சொல்லப்பட்டுள்ளது. அதேபோல் கடைசி இரவு உணவின்போதும், அப்பத்தை எடுத்து நன்றி செலுத்தி, தன் சீடருக்கு அளித்தார் என்றும் அதேபோல் கிண்ணத்தை எடுத்து நன்றி செலுத்தி பிறகு தன் சீடர்களுக்குக் கொடுத்தார் என்றும் வாசிக்கின்றோம். உணவிற்காக நாம் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்பதை இயேசு இதன் வழியாக நமக்குக் கற்றுக் கொடுத் துள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை.

எனவே, இதனிமித்தம் பூமியில் நல் விளைச்சலுக்கு நன்றி கூற நாம் கடமைப்பட்டுள்ளோம். அவ்வகையில் பொங்கல் அனைவருக்கும் பொதுவான விழாவாக உள்ளது.

இவ்வாண்டு தை மாதம் சனவரி 15-ல் பிறப்பதால் பல பங்குகளில் பொங்கல் விழா அடுத்து வரும் ஞாயிறான 21 சனவரி அன்று கொண்டாடப்படுகிறது. மேலும், பொதுக்காலத்தின் மூன்றாம் ஞாயிறான 21 சனவர அன்று, திருஅவை இறைவார்த்தை ஞாயிறு தினத்தையும் அகில உலக ரீதியில் கொண்டாட வேண்டியுள்ளது. இவ்வாறு இரண்டு கொண்டாட்டங்களும் ஒரே தினத்தில் அமைவதால், பல பங்குகளில் பொங்கலும் இறைவாரத்தை ஞாயிறு கொண்டாட்டமும் கூட்டுப் படைப் படைப்பாக ஏற்பாடு செய்யப்படுகிறது வரவேற்கப்பட வேண்டியொன்றாக உள்ளது.

பொங்கல் தித்திப்பான உணவு. திருப்பாடல் 34:8-ல் 'ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்' என்று கூறுப்பட்டுள்ளது. ஆகவே, இம்முறை, ஆண்டவரின்






வார்த்தையான இறைவார்த்தையைப் பொங்கல் போல் சுவைத்து, அக்களித்து உண்ண இறைவன் நல்லதொரு வாய்ப்பை அளித்துள்ளார். பொங்கல், இறைவார்த்தையை தித்திக்கும் உண வாக எற்று மகிழ்ந்து, பகிர்ந்து வாழ நம்மை அழைக்கிறது.

பொங்கலினும் இனிய உணவாக இறை வார்த்தையை அனுதினமும் சுவைத்து வாழ்வோம்.

*- ஆர்.கே., காஜாங்*

# பேசும் ஆண்டவரே, நானும் கேட்பேன்!

இன்று ஆண்டில் பொதுக்காலத்தில் இரண்டாம் ஞாயிறு. இன்றைய திருவழிப்பாட்டு வாசகங்கள், இறை அழைத்தலின் மகிமையை நமக்கு சுட்டிக்காட்டுகின்றன. ஆலயத்தில் சாதா ரண பணி செய்த சிறுவன் சாமுவேலுவுக் கான இறைவனின் அழைப்பை அறிகிறோம். இறைவன் மனிதரை எப்போதும் தேடிக் கொண்டே இருக்கிறார் என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இன்றைய முதல் வாசகம். ஒரு முறை அல்ல நான்கு முறைகள் தேடி வந்து அழைத்தார். இறைவன் அழைப்பைக் கேட்ட சாமுவேலும்" பேசும் உம் அடியான் கேட்கிறேன்" என்று மறுமொழி கூறினார். இறைவனின் அழைப்பை ஏற்றார் இறைவாக்கினராகச் செயல்பட்டார்.

இரண்டாம் வாசகத்தில் 'உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோவில்' எனவே என்றும் புனித வாழ்வைத் தேடுங்கள் என்று கொரிந்தியர்களுக்கு அழைப்புவிடுக்கிறார் புனித பவுல் அடிகள்.

இன்றைய நற்செய்தியில் இறைவனின் அழைத்தலின் மாட்சி நமக்குச் சுட்டிக் காட்டப்படுகிறது. இங்கே திருத்தூதர் களான அந்திரேயா, பேதுரு மற்றும் யோவான் ஆகியோரின அழைப்பு குறித்து நற்செய்தியாளர் யோவான் விவரிக்கிறார். சென்ற வாரம் இயேசுவின் திருமுழுக்கின் வழி இயேசுவும் பொதுப்பணி வாழ்வுக்கு அழைக்கப்பட்டார். இன்று யோவானின் சீடர்கள் இருவர் ஆண்டவரைப் பின் தொடர்ந்தபோது, அவர் அவர்களைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி " என்ன தேடுகிறீர்கள்" என்றார். சீடர்கள் யேசுவிடம் " ரபி , நீர் எங்கே தங்கியிருக்கிறீர்" என்று கேட்டனர். " வந்து பாரும்" என்று இயேசு அழைத்தார். சீடர்கள் இருவரும் இயேசுவுடன் தங்கி அவரின் எளிய வாழ்க்கை மற்றும் இறையாட்சிப் பணியைக் கண்டு வியந்து இயேசுவிடம் சீடர்களாக மாறினர்.

இயேசுவை அறியாதிருந்த அந்திரேயா" வந்து பார்த்தவுடன்" இயேசுவை அறிந்து கொண்டார். தான் அறிந்து கொண்ட இயேசுவை அவரால் அறிவிக்காமல் இருக்க முடியவில்லை. அந்திரேயாவும் மற்றொரு சீடரும் இயேசுவைச் சந்திக்கச் சென்ற நேரம் மாலை நான்கு மணி என்று யோவான் நற்செய்தியாளர் கூறுகின்றார். இது நமக்கு ஒரு முக்கியமான உண்மையைச் சுட்டிக் காட்டுகின்றது.

இங்கு அழைப்பு என்று கூறும்போது, அது துறவற வாழ்வுக்கான இறைவனின் அழைப்பு என்றே நம்மில் பலர் கருதுகின்றனர். அருள்பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகளே அழைக்கப்ப்ட்டவர்கள் என்ற எண்ணம் நம்மில் நெடுங்காலமாக இருந்துவருகிறது. மாறாக, இறை அழைப்பு என்பது திருமழுக்கால் நம் ஒவ்வொரு வருக்கும் உரியது. நல்ல மனிதர்களாக, இயேசுவுக்கான சிறந்த சாட்சிய வாழ்வுக்கான பொதுக்குருத்துவத்தில் முழுமையாகப் பங்குகொள்ள நாமும் அழைக்கப்பட்டுள்ளோம். எனவே, நமக்கு உயர்வான குறிக்கோள் உண்டு என்பதை நினைவில் கொள்ள வேண்டும். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பதாகிவிடக்கூடாது நமது கிறிஸ்தவ வாழ்வு.

நமது அழைப்பு, இயேசுவை சொல்லாலும் செயலாலும் நாம் பிறருக்கு அறிமுகப் படுத்தும் பணி வாழ்வாக அமைய வேண்டும்.

*சவரிநாதன், சுங்கைபட்டாணி, கெடா*

**ஆண்டீன் பொதுக்காலம் 2-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | 1 சாமு 3: 3-10,19 |
| திரு.பாடல் | 40: 2,3. 6-7a. 7b-8. 9 |
| 2-ம் வாசகம் | 1கொரி 6: 13-15-17-20 |
| நற்செய்தி | மத்தேயு 2: 1-12 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**